ஓலை 49 | ஓசை 167 | நளி (நவம்பர்) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகழும் தமிழே!
முதலும் தமிழே!!




தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

முயன்று சம்பாதித்த பொருள் எல்லாம், உழைக்க முடியாமல்
பொருள் தேவைப்படுவோர்க்கு உதவுவதற்கே

**Translation:**

The worthy say, when wealth rewards their
toil-spent hours,
For uses of beneficence alone 'tis ours.

**Explanation:**

All the wealth acquired with perseverance
by the worthy is for the exercise of benevolence.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல

## இலக்கியப் பேரவை

அகழும் தமிழே!
முதலும் தமிழே!!

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# ஔவையாரின் நல்வழி

**துணைப் பொருண்மை: பரத்தையர் தொடர்பு**

**பா வகை: அம்மானை**

நல்லொழுக்கம் தான்கெட்டு நாடிடுவார் பெண்பின்னே
பொல்லாத மோகத்தால் புல்லர்யார் அம்மானை?
பொல்லாத மோகத்தால் புல்லாரும் யாரெனிலோ
இல்லாளை தான்மறந்ந ஈனரவர் அம்மானை
கல்லிற்கே ஒப்பாகும் காட்சிபிழை அம்மானை

வேண்டா பழக்கம் விலக்கும் மதிப்பையே
தூண்டிடும் இச்சையில் துள்ளுவார்யார் அம்மானை?
தூண்டிடும் இச்சையில் துள்ளுபவர் யாரெனிலோ?
காண்கின்ற மாதுமேல் காமமுறும் அம்மானை
தீண்டும் பரத்தையர் தீயன்றோ அம்மானை!



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# ஹைக்கூ

கான்கீரிட் தளத்தில்
எட்டிப் பார்க்கிறது
நெருஞ்சி பூ.

**



கஜானா கரைகிறது
நேற்று பெய்த மழையில்
தார்சாலை.

***

அமைதியை திரும்ப
தீபாவளியன்று காத்திருந்தது
பறவைகளும் விலங்குகளும்.

****

திருமண விழா
குடும்பத்தோடு வருகை தந்தார்கள்
மழைக்கால ஈசல்கள்.

கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# குறுங்கவிதைகள்

கோப்பையிலிருக்கும்
தேநீரைச் சுடச்சுட
சுவைத்துப் பருகுகிறாள்.
அவளின் இதழ் வழி
உயிரமுதத்தை
இனிக்க இனிக்கப்
பருகுகிறது "கோப்பை".



/

உச்சிமண்டையில்
ஆணி வாங்கிய
சிவன் படம்.
தலையில்
முள்கிரீடம் சுமந்த
ஏசுபிரான் சிலை.
வசதியாய் இருக்கிறது
பக்தர்கள்
பூவைத்து வழிபட!

இன்னும்
ஒரு புத்தன் வேண்டுமாம்
மேலும்
ஒரு மகாத்மா வேண்டுமாம்
முட்கிரீடம் சுமக்க
ஒரு ஏசு வேண்டுமாம்
புதியகீதை சொல்ல
ஒரு கிருஷ்ணன் வேண்டுமாம்
இந்த பூமியின்
புனிதத்தை புரட்டிப்போட!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# ஏடும் எழுதுகோலும்

எழுதுகோல் என்னை தட்டித்தட்டி எழுப்புகிறது
ஏட்டில் என்னை கிறுக்கி வை என்றது
அந்த கிறுக்கல்கள் கோடுகளாய் ஆனது
கோடுகள் வார்த்தைகளாய்
வார்த்தைகள் வரிகளாய் உருவானது
வரிகள் மேல் வரிகள் கிடைக்க கவி பிறந்து
செவி சாய்ந்தது
மாணவா மகிழ்ச்சி கொள்
இன்று நான் ஆசான்
இடையினில் மாணவன்
எதிர் கொள் உனக்கான நேரத்தை
உதறிதள் உனக்கு எதிரான விளக்கத்தை
சபையே எதிர்த்தாலும் சமத்துவத்தை மறவாதே
சாதிக்காமல் நீ மறையாதே
நீ சிறந்தவன் என உனக்குள் நீயே சொல்லிக்கொள்
நீ சாதித்தால் மட்டுமே பிறர் சொல்லிக்கொள்வர்
வீட்டினில் ஏடுகளை திருப்ப தொடங்கு
ஏட்டினில் எழுத தொடங்கு
எண்ணிலடங்க எண்ணங்களை ஏட்டினில் அடக்கு
மண்ணில் புதைக்கப்பட்ட விதையோடு
உன்னை ஒப்பிட்டுக் கொள்
எதையும் தாங்கி விதையும் எழுகிறது
உன் இதயம் நிலமென எண்ணிக் கொள்
இலக்குகளை விதைத்து விடு
முடிவுகள் முளைக்கட்டும்



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# உலகம் உன் வசம்

வா
வந்து விட்டோம்
வாழ்ந்தோம் என்றே
பேர் வாங்கிச் சென்றிட
வாழ்ந்து காட்டுவோம்
உலகமே உன்னை நோக்கி
மூக்கில் விரல் வைத்து வியந்து நோக்கிட



வானவில்லுக்கு நிறங்கள் கூட்டுவோம்
வான் நிலா இல்லாத நாளில் வெள்ளை அடித்து
வெளிச்சம் போடுவோம்.
கடலில் நடந்து மகிழ்வினை கொள்ளை
அடிப்போம்...மூழ்கி மூழ்கி முத்தெடுத்து
மற்றோரின் மூச்சடைப்போம் ஆச்சரியத்தால்.

ஆண்டாண்டு காலமும்
மாண்டே அழுதாலும் மீண்டெழுந்தே
இறந்தோர் இனி வருவாரோ
எனும் பேச்சை உடைத்து தீயில் போட்டு
உருவாக்குவோம் உயிர் மூச்சினை.

வந்து பிறந்து விட்டோம் — இனி
வாழத்தெரியவில்லை — எனும் உணர்விற்கே
இறக்கைகள் கட்டி பறக்க விட்டு..
வெட்டிப் பேச்சும் கற்பனை கனவுகளும்
விலக்கி வைத்தே — கடின உழைப்பில்
மிடுக்குடன் கால்கள் நடனமிட
காலமெல்லாம் கனவுகள் மெய்ப்பட
வசந்த்ங்களை வாங்கி வந்து தொங்க
விடுவோம் நம் வீட்டு மாடத்திலே.

வாழ்வதோ ஒருமுறை
வித்தைகள் செய்வோம் விண்ணையும்
அளப்போம்.. செவ்வாய் கிரகம் சென்றே
தங்குமிடம் கட்டுவோம்; எங்கும் எதுவும்
முடியாதென; விடியும் எனக்காத்திருக்காதே
கிழக்கில் ஆகாயத்தைப் பிளந்து உதயனையே
அழைத்து வர; மனதில் சங்கல்பம் கொண்டே
மனதில் நீயும் தெளிவாக செயல்படு
நாளைய உலகம் என்ன
என்றுமே உலகம் உன்வசம்.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# நாவல்கள்

எனக்கு தோழமை கொடுத்தாய்
பக்கங்களை புரட்டுகையில்
உன்னுள் ஐக்கியமாகி விடுகிறேன்

சோர்கின்ற பொழுதுகளில்
உன்னை நாடுகிறேன் தோழமையாகிறாய் நீயே
எத்தனை உறவுகளிருந்தாலும்
அன்றொரு பொழுதில் நீயே என்னை தாங்கினாய்




பக்கங்களை பத்திரமாக்கிறது
எழுத்தாளரின் கற்பனை வரிகள்
என் மனதுக்கு அதுவே அருமருந்தென்றாகி
உவகை கொடுக்கிறது

நாளுக்கொரு அத்தியாயமாக
நீயும் வந்துதிக்கையில்
அமைதியில் உன்னை தரிசிக்கவே
காத்திருந்து தூக்கமென்றாலும்

உன்னை சுவைத்தே விழிகளுக்கு
தூக்கத்தை கொடுப்பதுண்டு
காதல் என்றாலும் காவிமென்றாலும்
கற்பனை திறனில் தத்ரூபமாகிறது

எழுத்தாளர்கள் யாவரும் உயர்ந்து விடுவதில்லை
சில நேரம் நலவுகள் வெளிப்படாமலே
கருகிபோய் விடுவதுதானே

உன்னை நானும் படித்துதானே
என் வாசிப்பு முற்றிடாமல் வைத்திருக்கிறேன்
உன்னை படிக்காது போயிருக்க
வாசிப்பென்றது மறந்தே போயிருக்குமே

வாசிப்பு தான் மனிதனை பூரணமாக்கும்
கண்டதையும் படித்தேனும்
கற்றுதேர் என்பது போதனை அல்லவா
கல்வி நோட்டோடும் ஏட்டோடும் நிற்காதீர்கள் உள்ளங்களே
மன அழுத்தத்தை குறைக்க நகைச்சுவையும்
நல்ல நூலையும் தேர்ந்தேடுத்தேனும் கற்று விடுவீராக

நாளைய தலை முறையினருக்கு
பரிசுகளாக புத்தகத்தை கொடுத்து விடுங்கள்
நவின ரக தொலைப்பேசிகளை கொடுத்து
பழக்கப்படுத்துவதை நிறுத்திதான் விடுங்களேன்


கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி,புத்தளம்

# பேரின்ப பெருவாழ்வு

பிறப்புக்கும் இறப்புக்கும்
இடையில் ஊசலாடுவதே
வாழ்க்கை!

உடல் பிணியற்று இருப்பதும்
மனம் கவலையற்று இருப்பதும்
பிறருக்கு உதவியாக வாழ்வதும்
பேரின்பமாகும்!

நான் என்ற அகங்காரம்
எனது என்ற மமகாரம்
இன்றி மனம் அடக்கி
வாழ்வதே பெருவாழ்வு!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை119

# சிதையும் உள்ளமதற்கு சேதி ஒன்று

வருவோர் போவோரெல்லாம்
வசை சொல்லி செல்கையிலே
சிதைந்த உன் உள்ளமதற்கு
சேதி ஒன்று நீ கூறு

உன் உள்ளம் நல்உள்ளமென
இறையோனன்றி அறிவதோ
நீ மட்டும் தானே?
பிறகெதற்கு கலக்கம்
பிறரின் கூற்றதை எண்ணி?



பழிகள் சொல்லி
வலிகள் தந்துவிட்டு
நகைத்திடும் புன்னகைக்கு
உன் புன்னகையை
பூத்திடச் செய்து
கருகிடச் செய்திடாதே

சொல்பவர்கள்
சொல்லிக்கொள்ளட்டும்
பச்சோந்திகளாய் கூட
மாறிக்கொள்ளட்டும்
சிதைந்திடும் உன் உள்ளமதற்கு
சேதி ஒன்று நீ கூறு
உன்னாலே உயர்ந்து
நின்றிட முடியுமென்று

கலங்கிடும் உள்ளமோ துலங்கிடாதே
துலங்கிட நீயுமே
கலக்கமதை வளர்த்திடாதே

சிதைந்தே முடங்கிடாது
வருவது வரட்டுமென்று
உன் வழிகளை நோக்கியே
உன் விழிகளை பதித்து பயணப்படு

கவிஞர் அறூபா அஹ்லா,கல்முனை(இலங்கை)

# தூய்மைக்குணம்

சாலை எங்கும் நீர் வழிந்து ஓடுகிறது
இரவில் கொட்டி தீர்த்த பெருந்துளிகளால்
சிதறிக் கிடக்கின்றது இறுக்கி கட்டிய
வெடிமருந்துகள் பழைய தாள்கள்
கொட்டும் மழையில் வாளுடன் இறங்கினால்
சிதறிய குப்பைகளை ஒன்று சேர்க்க
அதிகாலையில் காக்கை குருவிகளின் இசையோடு
மெல்லிய நெகிழி தாளை அணிந்துக்
கொண்டு இறங்கியவள் பிறரின்
வார்த்தைகளின் ஆதிக்கத்தை செயல்களில்
அடித்து ஓரம் கட்டி ஒதுக்கினாள் வாளால்
தூய்மையை விட தூயவலானாள் தன் குணத்தில்



கவிஞர் முனைவர்.அக.வீரவன்சாரா,வளையமாதேவி

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# சிலப்பதிகாரம் (பதினெட்டு)

16. கொலைக்களக் காதை ( தொடருகிறது )

5. கோவலன் சிலம்பை விற்றல் :

கடைவீதி கோவலன் எதிரில் எருது ஒன்று பாய்ந்து வந்தது
தடை எதோ உள்ளது கெட்ட சகுனம் அவன் உணரவில்லை
நடைபாதையில் பொற்கொல்லன் வருவதைக் கண்டான்
உடையைப் பார்த்து அரசனின் தட்டான் என்று உணர்ந்தான்




"அரசியின் காலுக்கு ஏற்ற சிலம்பு ஒன்று என்னிடம் உள்ளது
தரமானது அதனை விலைக்கு விற்றுத்தர முடியுமா?" என்றான்
"வரமாக வந்திருக்கிறான் தன் திருட்டை மறைக்க, விடக்கூடாது
சரமாரியாக கேள்விகள்கேட்டு இவனை குழப்பிவிடக் கூடாது"

"உன்னைப் பார்த்தால் நல்லவன் என்று தெரிகிறது. கவலைவிடு
மன்னனிடம் சென்று வருகிறேன் , அதுவரை , இங்கேயே தங்கியிரு"
தன் சிலம்பை அவனிடம் காண்பித்து,"காத்திருக்கிறேன் வாருங்கள்"
மின்னும் பொற்சிலம்பினைப் பார்த்தவன் முகத்தில் வியப்பு

சித்திர வேலைப்பாடுகளுடன் மாணிக்கப் பரல்கள் கொண்டது
இத்தகைய சிறந்த சிலம்பு பாண்டிய நாட்டிலேயே கிடைக்காது
அத்தனை அழகு சிலம்பினை பொற்கொல்லன் கண்டான்இல்லை
எத்தனான அவன் சிலம்பினை ஆராய்ந்து வருவதாகக் கூறினான்

மனதுக்குள் அவன் போட்ட கணக்கை கோவலன் அறியான்
தனது நாட்டு அரசியின் சிலம்பை களவாடிய பொற்கொல்லன்
முனகன் இவனே, இவன் சிலம்பைக் கொடுத்து தப்பிவிடலாம்
கனவான் கோவலனே "திருடன்" இவனைக் காட்டிவிடலாம் .
( முனகன் : கயவன்)
அரசன் நாடக நங்கையின் ஆட்டத்தில் மயங்கி இருந்தான்.
அரசி கோப்பெருந்தேவி இதனைக் கண்டு அவனிடம் ஊடல்
அரசனை முறைத்து தலைவலி என்று அங்கிருந்து சென்றாள்
விரசமான நேரத்தில் பொற்கொல்லன் அரசனிடம் வந்தான்

6. அரசரின் ஆணை : "கோவலனைக் கொன்று வா"
"மன்னா அரசியின் சிலம்பைக் களவாடியவனைக் கண்டேன்"
"உன் கூற்றுப்படி அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டுவா"
தன் சிலம்பைக் கண்ட காவலர் அது அரசியினுடையது என்றனர்
முன்பின் ஆராயாமல்,"கோவலனே கள்வன்", என்றனர் காவலர்

7. பொற்கொல்லனின் பொய்க்கதை:
"இக்கள்வன் மந்திர தந்திரங்கள் கற்று கன்னக்கோல் வைப்பான்
தக்க நேரத்தில் மாற்று உருவத்தில் மாயமாக மறையக் கூடியவன்
எக்காலத்திலும் பிடிபடாமல் தேவர்களிடமே திருட வல்லவன்
பக்கமாக வந்து என்னிடம் வசமாக மாட்டிக்கொண்டான்" என்றான்

8. பாண்டியன் செங்கோல் வளைந்தது :
காவலர்களுள் இளைய வீரன் சொன்ன கதையை நம்பினான்
கோவலன் முன் தன் உடை வாளை வீச அவன் உடலைத் துணித்தது
மாவலன் உடலில் இரத்தம் பீறிட இரு கூறாக மண்ணில் சரிந்தான்
சீவாதாரமான வளையாத செங்கோல் வளைந்ததே ஊழ் வினையால்
( மாவலன் : வல்லவன், சீவாதாரம் : வாழ்வுக்கு ஆதாரமானது )

...தொடரும்

கவிஞர் ந. திருக்காமு

# பிரார்த்தனை


பிரபஞ்சத்தை படைத்து பின்பு இயற்கையை படைத்து
மரத்துக்கு கார்பன் டை ஆக்சைடை உள்ள இழுத்து ஆக்சிஜனை
வெளியே விடும் சக்தியை கொடுத்து அந்த தூய்மையான
சுவாசக் காற்றை மனிதனுள்
அனுப்பி உயிர் வர செய்து.
பின்பு தாகத்திற்கு
தண்ணீர் படைத்து உடலின்
70% பாகத்தை தண்ணீரால் நிரப்பி
நம்மைப் படைத்து.
பிரபஞ்சத்தை ஆள அதிகாரம் கொடுத்து.
பிரபஞ்சத்திற்கு மனிதன் கேட்பதை கொடுக்கும்
அதிகாரத்தை கொடுத்த கடவுளுக்கு
(ஆகும் படி செய்கிறவர்) நம் மீது அன்பு காட்டிய கடவுளுக்கு
மனதார நன்றி சொல்வது பிரார்த்தனையாகும்.





கவிஞர் ஜெ.தேவிராஜசேகர்,சென்னை

# சன்னலோரப் பயணம்



சன்னலோரப்
பயணத்தில்
சில்லென்ற
காற்று

முகத்தில்
அலையென
மோதும்
தலைமுடி.

சாலையோர
மரங்கள்
அணிவகுத்து
வரவேற்க

கிளைகளின்
ஊடே
கதிரவன்
ஒளி

தரையில்
நிழல்
கோலம்
வரைய

நீலவானில்
வெண்மேகம்
நிதானமாய்
உலா.

வடிவம்
மாற்றி
வாகாய்ச்
செல்ல

மனதில்
ஏதோ
நினைவுகளின்
அலை.

பேருந்து
பயணத்தைப்
பேரின்பப்
பயணமாக்க

வானம்
பார்த்த
பூமியில்
கள்ளிச்செடிகள்.

மேடும்
பள்ளமுமாய்
மேய்ச்சல்
நிலங்கள்.

கால்நடை
மேய்ப்போர்
கால்நடையோடு
நடந்தே

வெப்பத்தைத்
தணிக்க
வேம்பின்கீழ்த்
தங்கிட

பாதையில்
போகும்
பேருந்தைப்
பார்த்தே

சற்றே
தன்னுடல்
வலி
மறக்க

பயணித்தோர்
மனதிலோ
பல்லாயிரம்
கனவுகள்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# நினைவு

பழைய டைரியில்
நாட்குறிப்புகளை
புரட்டிப் பார்க்கையில்
பக்கம் தவறாது
உன்னைப் பற்றின
நினைவுகள்!



கவிஞர் ஸ்ரீவள்ளி,கோவை

# இயற்கையின் அழகு

கண்கள் குளிர
சிரிப்பு மலர
சிந்தனையில் உதிக்க
கற்பனையில் எழுத



கோடி பணமும்
செயற்கை அழகும்
ரசிக்கும் மனமும்
மறந்துவிட்டதே

இயற்கையின் அழகை
கண்ணால் பார்க்கும் நிமிடம்
கவி சொல்லும்
இயற்கையின் அழகை பற்றி

ஓடி திரிந்தஇளமை பருவம்
மறக்காது இந்த நிமிடம்
இயற்கையோடு விளையாடிய நாட்களை

கட்டு கட்டாய் பணம் இருந்தாலும்
மறக்க முடியாது
நம் அழகான
நினைவுகளை

மீண்டும் தர முடியாத
நினைவுகளும்
சிந்தனையில் உதிக்கும் பல கற்பனையும்
எம் இயற்கைக்கு சொந்தம்


இயற்கையோடு
இயற்கையாய்
வாழத் தெரிந்த நமக்கு
செயற்கைக்கு
அடிபணிய முடியாது

ஆதி குடி மனிதன் வாழ்ந்த
இயற்கை பூமி இது
வரியால் எழுத முடியாத அழகு அது

கவிஞர் சபியா பானு,கம்பஹா

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# அன்பிற்கினிய



உறங்கும் போதும்
எழும்போதும் அருகிருக்கிறாய்
பணியிடைவேளையிலும்
பகல் போசனத்திலும்
பக்கத்தில் நீ

தேனீர் வேளையிலும்
தேக அசதியிலும்
தினவாக நீதான்

மழை நாளிலும்
வெயிலிலும் நிழலிலும்
மயிற்பீலி நீ

வேதனையிலும்
மகிழ்விலும்
வடிகால் நீ

விரும்பும் வேளைகளில்
கரும்பாக நீ
தினமும் தேடித்தொடும்
உறவாக நீ

புன்னகைக்கவும் பூரிப்படையவும்
ஏன்? யோசிக்கவும்
செய்வாய் நீ

என்னுள் புதிர்களும்
புதுமைகளும்
படைப்பாய் நீ
வெறுங்கை வீசிச்செல்ல
விடுவதேயில்லை நீ

விடாது தொற்றிக்கொண்டு
எப்போதும் என்னுடன்
ஒட்டிக்கொண்டு நீயேதான்

என்னைத்தனிமையில்
என்றும் விட்டதே
இல்லை நீ

என் அன்பிற்கினிய
புத்தகமே!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# மழலை

பிஞ்சிப் பாதங்கள் நிலத்தில் நிலைக்கவே
அழகு சேர்ப்போம் நாளைய உலகையே
நஞ்சி கலந்த வஞ்சகரை விரட்டியே
மழலைக்கு சுதந்திட நாடு உருவாக்கிடுவோம்

சாதிவெறி அழித்திடுவோம் சாமாதானம் நிலைத்திடவே
இனமத சண்டைகளுக்கு இடம்தர மறுத்திடுவோம்
இனியமைதி எல்லா இதயங்களிலும் நிலைத்திடவே
இளைய தலைமுறைக்கு இடத்தை கொடுத்திடுவோம்

வயதும் ஏறிப்போச்சி வாலிபங்கள் தொலைஞ்சாச்சி
வருங்கால மனுக்குலம் மழலைகள் வசமாச்சி
வளர்வது நெற்பயிரே நல்லுறம் போட்டிடுவோம்
நல்சொல் பேசியே நல்லறம் புகட்டிதுவோம்



கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு (இலங்கை)

# குழந்தை சிரிப்பில்

துவண்ட நெஞ்சத்திலும்
தூறலாய் விழும்

துளித்த மழலையின்
துள்ளியெழுந்த பொன்சிரிப்பு

கதிரவனும் விழித்தெழுவான்
காரிருளும் கிழித்திடுவான்

மழலையின் பொன்மொழியில்
மாதங்களில் நிறைந்திடுவான்

மார்கழியின் திங்களையும்
சித்திரையில் தந்திடுவான்.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# மழலை

மறக்குமா நெஞ்சம்
ஒவ்வொரு வீட்டின் மழலை மனம்.
சின்னஞ்சிறு குட்டி கதைகள்
கொட்டி தீர்க்கும் சுட்டி விளையாட்டு.
ஒவ்வொன்றும் புது மொழி
மழலையின் வாய்மொழி.
கல்நெஞ்சமும் கரைந்து போகுமே
கனநொடியில் மழலையின் சிரிப்பில்.
தெய்வத்துடன் ஒப்பீடு
அதுவே மழலையின் மெய்ப்பாடு.
மழலையின் ஐம்புலன்களும்
அழகு சூட்டுமே.
ஒவ்வொரு குடும்பத்தின் கொண்டாட்டமும்
பிள்ளைகளின் தாலாட்டும்.



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# உலகம்



நீ வென்ற பரிசை அல்ல
நீ செய்த தவறை சுட்டிக்காட்டும்
இந்த உலகம்.

தவறுகளை எதிர்க்க அல்ல
தவறுகளைக் காண்பதற்குத்தான்
இந்த உலகம்.

நீ மேலே செல்ல செல்ல
உன் கால்களை இழுக்கும்
இந்த உலகம்.

நீ சிரிப்பதைக் கண்டு அழும்
நீ அழுவதைக் கண்டு சிரிக்கும்
இந்த உலகம்.



இறுதி ஆனால் முடிவல்ல
என்னை அழ வைத்த இவ்வுலகத்தை
நான் சிரிக்க வைப்பேன்.

கவிஞர் வ.ரா.மதுவர்ஷா,ஏழாம் வகுப்பு,ஏ கே ஆர் அகாடமி பள்ளி, திருப்பூர்

# ஓங்குக தமிழ்

அன்பை வாரி வழங்கிய மொழி
ஆலமரமாய் வளர்ந்து நின்ற மொழி
இயல்பை எல்லாம் சொல்லிய மொழி
ஈகை உணர்வை வளர்த்த மொழி
உலகம் போற்றி பாராட்டிய மொழி
ஊராரை ஒன்று சேர்த்த மொழி
எளியோரும் கற்று உணர்ந்த மொழி
ஏற்றமாய் நின்று வாழ்ந்த மொழி
ஐயத்தை எல்லாம் நீக்கிய மொழி
ஒளி மயமாய் திகழ்ந்த மொழி
ஓடி ஓடி கற்ற மொழி
ஔவையும் கற்று தந்த மொழி






கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# நெய்தல் காதலியே

ஓடையிலே சேதி வர
ஒத்தையில நீயும் வர
கட்டுமர மாமனும் தான்
கட்டுமஸ்தா கரை இருக்க
செக்கச் சிவந்தவளே, வெட்கத்தில்
செங்காந்தள் முகம் மலர
வாசலிலே கோலம் போடு
வாய்க்காலில் ஏன் எதற்கு?
மூச்சுதான் முட்டி நிற்க
பேச்சத் தான் காணலியே
கதகளியில் திரிஞ்சவளே
கண் திறக்க முடியலையோ?
கட்டாந்தரை விரிப்பு போடு
பட்டிதொட்டி சொல்லிப்புடு
பரிசம் போட நானும் வரேன்
கரிசனமாய் என்னைக் கவனி!
முத்துப் பல்லழகி
முல்லைப் பூவை சூட்டிக்கேயேன்
குட்டி ராட்சசியே
குண்டுமல்லி சூட்டிக்கேயேன்
காந்தக் கண்ணழகியே
கனகாம்பரம் சூட்டிக்கேயேன்
சந்தனக் கட்டழகே
சரம் சரமாய் சூட்டிக்கேயேன்
காத்திருடி கண்மணியே
சூட்டிவிட நானும் வரேன்!



கவிஞர் திருமதி மோ.கோமளாநேதாஜி

# கல்லறை முன் என் தவம்!

உன் போலே யாருமில்லை
என் நெஞ்சை தீண்டவும் இல்லை
கண்ணோடு காதல் பேசும்
கன்னி மொழி அறியவில்லை



உலகில் நான் வாழும் நாளும்
உன்னை தான் தேடுவதாலும்
தினம் மலர்ந்து மடியும் புஷ்பம்
என் பிறவிக் கொண்டேன் நானும்

விடியற்காலை புலர்ந்தாலும்
மயக்கும் மாலை மலர்ந்தாலும்
மறுவாய் மாறும் என் பாசம்
மறுக்காது உனை மட்டும்

தொடர் தூரம் நீயானாலும்
தொலைந்தே நீ போனாலும்
தேடல் கலை என்னில் என்றும்
தட்டியெழுப்பும் உன் நினைவை மட்டும்

கைகோர்த்து நடந்தோம் நாமும்
களிப்பாய் கடந்த நம் காலம்
நினைவுகள் இன்று மட்டும்
கண்ணீரில் கரையும் மாயம்

கல்லறை சகவாசம்
உனைத்தேடி கண் திறந்ததும்
எனை நீங்கி நீ சென்றதும்
மீண்டும் உனை மீட்டிடும்
உன் கல்லறை முன் என் தவம்

கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்

# வாழ்க்கை எனும் நாடக மேடையில்

உமது நடிப்பால்
பல நாள் பகைமையொன்று
விலகி விடுகிறதா
நீங்கள் ஒரு சிறந்த நடிகர்தான்



கவலைகளை மனதில் ஒளித்து
மற்றவர் முன்னிலையில்
எதுவுமே நடவாததுபோல் சகஜமாக
உம்மால் பழக முடிகிறதா
நீங்கள் ஒரு சிறந்த நடிகர்தான்

மற்றவர்களின் உணர்வுகளுக்காய்
உங்கள் உணர்வுகளை மறைத்து
உங்களால் எதுவுமில்லாதது போல்
புன்னகை புரிய முடிகிறதா
நீங்கள் ஒரு சிறந்த நடிகர்தான்

சிலரின் தேவைகள் நிறைவேற
உமக்கு எந்தத் தேவைகளும்
இல்லாததுபோல் உம்மால்
நடந்துகொள்ள முடிகிறதா
நீங்கள் ஒரு சிறந்த நடிகர்தான்

உறவுகளின் நிம்மதியான உறக்கத்திற்காக
உறக்கமே வராததுபோல்
காட்டிக் கொள்ள முடிகிறதா
நீங்கள் ஒரு சிறந்த நடிகர்தான்

சொந்த வாழ்வில் சந்தோஷத்தை இழந்து
அடுத்தவர் சந்தோஷத்தில்
சாவகாசமாக உம்மால்
நடந்து கொள்ள முடிகிறதா
நீங்கள் ஒரு சிறந்த நடிகர்தான்

சில பொய்களைச் சொல்லியாவது
பிரிந்திருந்த உறவுகளை
குடும்பத்தை ஒன்றிணைத்தலில்
உங்களால் வெல்ல முடிகிறதா
நீங்கள் ஒரு சிறந்த நடிகர்தான்

வாழ்க்கை எனும் நாடக மேடையில்
வீழாது வாழ்தல் போராட்டம்
விரும்பியோ விரும்பாமலோ
நாம் ஏற்கும் பாத்திரங்கள் ஏராளம்
நம் நடிப்பு சிறந்ததாக அமையட்டும்

கவிஞர் ஷெண்பகச் சோலையாள், ஆய்ஷ்(இலங்கை)

# பனித்துளிக்குள் உலகம்

தமிழ்த்தேனருந்தும்
பட்டாம்பூச்சிகளின் பள்ளியில்
தந்தையர்தினக் கொண்டாட்டம்



வரிசையாய் நிற்கும் பனித்துளிகள்
விழிகள் கட்டிய அப்பாசூரியன்கள்
ஆடும் கண்ணாம்பூச்சி ஆட்டம்

தங்காரட்டிகளின் விரல்களைத்
தொட்டுத் தொட்டுக் கடந்து
மகளுலகத்தில் சங்கமிக்கும் அசல்

நேசநரம்புகள் மைதீட்டி
திரைமூளையில் வரையும்
உயிர்நகலின் ஓவியம்



இதயத்தில் பூத்து
இதழ்களில் உதிரும் பெயர்
அப்பாவென கட்டியணைக்கும்
மகளுக்குள்
கரைந்து போகும் உயிர்.

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# கீற்றோடு சிறு சூரியன்



எனது பால்யத்தின் கனவுகளெல்லாம்
பக்கத்தில் நிற்பவனுக்கும்
கேட்பவனுக்கு கேளிக்கையாக இருக்கலாம்
அவன் சிரிக்க பழகிவிட்டான்
எனை மறந்து - நான்
சிரிக்க பழகிக்கொண்டேன்
பழமையென்பது பசுமரத்தாணிதானே
பகுத்தெறியப்பட்ட பறவையின்
தானியமல்லவே.

நிச்சயம் அந்த படகில் நான் பயணித்துள்ளேன்
கைகளால் அலைகளை ஒதுக்கியுள்ளேன்
கரையேறியவர்களை கைக் கொடுத்து
கரையேற்றியுள்ளேன்
ஆனாலும் திரும்பவில்லை
கரம் நனைத்த அலையொன்று.

எதற்காக இந்த நிலை
என எண்ணும் பொழுதெல்லாம்
மேலே பருந்தும்
கீழே தட்டானும் பறந்து செல்கின்றன.



மண்புழுக்களின் இறப்பிலெல்லாம்
ஒரு தாவரமும்
சிறியதோ பெரியதோ
ஒரு மீனொன்று சிக்கிவிடுகின்றன

விருட்சம் படரும் பொழுதெல்லாம்
யாரோ ஒரு கிழவன் துப்பிவிட்டுப் போன
விதைதான் ஞாபகத்துளிருடிகிறது

கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# சூழல்

ஓயாத மழை
ஒதுங்க இடம்
இல்லை!

புழுதி பாதை
புரண்டு ஓடும்
வெள்ளம்!

அந்தி மலரும் பூ
பிந்தி மலர்ந்தது!





கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# ராகிங் கொடுமைகள்

கல்லூரி மாணவர்கள் முதலாண்டில் சந்திக்கும்
எல்லையிலாத் தொல்லை ராகிங் கொடுமையே!
கோவை தனியார் பொறியியல் கல்லூரியின்
தங்கும் விடுதியில் முதலாண்டு மாணவரைத்
தாக்கியும் தலைமுடியை மழித்தும் ராகிங்!
மேற்கு வங்கத்தில் ஜாதவ்பூர் பல்கலையில்
தற்கொலை செய்துகொண்டான் மாணவன் ராகிங்கால்!
இளைய மாணவர்களுக்கு மூத்த மாணவர்கள்
இழைக்கின்றார் கொடுமைகளை!அதிகார அத்துமீறல்!
எழுதப்படாத சட்டமென இதனைக் கடைபிடித்து
உடலளவில் மட்டுமின்றி உள்ளத்தளவிலும் துன்புறுத்தல்கள்!



ஆயிரம் கனவுகளுடன் கல்லூரிக்கு வந்தோரை
இயல்புக்கு மாறான செயல்களைச் செய்திட
பயமுறுத்தி நிர்பந்தித்தல் எவ்வகையில் நியாயம்?
படிப்பைத் தொடராமல் துறந்தவர் பலருண்டு!
தடுப்பதற்கு யாருமின்றி கடுமையான மனத்துயர்
முடிகிறதே தற்கொலையாய்! முடியாதோ இத்துயரம்?
கடுமையான சட்டங்கள் பலவுண்டு இந்நாட்டில்!
கடைப்பிடிக்கத் தவறுவதால் தொடர்கிறதே இக்கொடுமை!
மனநோய்க் கூறுகொண்ட நடத்தையே ராகிங்காம்!
நன்நடத்தை,, சட்டவிதிகளை சரியாகப் பின்பற்றல்
ஆசிரியர், பெற்றோர்கள் , கல்வி நிறுவனங்கள்
ராகிங் புகார்களை முறையாகச் செவிமடுத்தல்,
அவலநிலை தொடராமல் இருப்பதற்கு தீர்வாகும்!
புற்றுநோயாம் ராகிங்கை புரையோட விடலாமோ?
வருங்கால பாரதத்தை வடிவமைக்கும் சிற்பிகளாம்
மாணவர்களின் சிந்தனைச் சீர்கேட்டை மாற்றிட
இனியேனும் வழிகாண்போம்! வகுத்திடுவோம் நெறிமுறைகள்!
இளைய சமுதாயம் ஒழுக்கமுடன் திகழ்ந்தாலே
களைந்திடலாம் ராகிங்கை!விளைந்திடலாம் நற்பயிராய்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# நீரோடை

இருமனங்கள் இணைந்து சங்கமித்தது நீரோடையாய்
நீரோடையாய் பீறிட்டு கிளம்பிய சிரிப்பொலியும்
சிரிப்பொலியில் கலந்து தவழ்ந்த காதலும்
காதலுடன் இணைந்தே பிறந்திட்ட அன்பும்
அன்பின் வெளிப்பாடாய் பிறந்திட்ட மகவும்
மகவின் வளர்ச்சியில் பூரித்த பெற்றோரும்
பெற்றோரின் குறிப்பறிந்து நடந்திட இனிமையே
இனிதாய் வாழ்ந்திட மென்மையும் அவசியமே
அவசியம் உணர்ந்து பகட்டை துரத்து
துரத்திடு தூரமாய் தீய எண்ணங்களை
எண்ணமது சீரானால் தெளிந்த நீரோடைதானே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# மெட்டி சத்தம்

படபடனு வெடிச்சிபுட்டு
பகட்டாக மின்னுதய்யா
நீ வாங்கி தந்த பட்டாசு



சுவரோரம் நீ சொன்ன
காதல்பித்து மொழிகேட்டு
காரைபிஞ்ச சுவரு
கரகரத்து கிசுகிசுத்ததய்யா

பேச்சு மறித்து உரசி கடந்ததை
கண்மூடி இரசித்துவிட்டு
ஒட்டுகேட்ட கவுலி
நகங்கடித்து சொன்னதைய்யா
வெட்கத்தில் முகஞ்சிவந்து

ஈரச் சேலை வெள்ளாவிக்குள்
நீண்டகதை பேசுதய்யா
பொழுதுகூட சவால்விட்டு
கடிகார சத்தங்கள்

கிச்சுகிச்சு மூட்டும்
கொசு சத்தமும் சேர்ந்துநின்னு
தவறிப்போய் இடை வளைத்தநை
இட்டுகட்டி பேசுதய்யா

சலக்கு சலக்கு சிங்காரி
மெட்டிசத்தந்தில் தனை தொலைத்து
சங்கடத்தில் நெளிந்தாளய்யா!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# பாட்டி பேத்தி உறவு

அன்பை பொழிவதில்
அன்னைக்கு நிகரானவள்.

ஆதரவாய் தோள் கொடுக்கும்
பாசமிகு தோழி இவள்.



இல்லத்தில் குடியிருக்கும்
இன்பம் இவள்.

ஈடில்லா மகிழ்ச்சி தரும்
செல்வம் இவள்.

உயிரில் கலந்திருக்கும்
உறவு இவள்.

ஊசி போல் உள்நுழைந்து
காயத்திற்கு மருந்து இவள்.

என்னுள் கலந்திருக்கும்
வலிமையான சக்தி இவள்.

ஏக்கங்கள் தீர்த்து வைக்கும்
ஏஞ்சல் இவள்.

ஐம்புலன்களையும் ஆட்சி செய்யும்
ஐஸ்வர்யம் இவள்.

ஒரு விரல் பிடித்து நடை பழகிய
தேவதை இவள்.

ஓர் உயிராய் இருக்கும்
பிரிக்க முடியாத பந்தம் இவள்.

ஔவை தமிழை அழகாய்
உச்சரிக்கும் குழந்தை இவள்.

அஃதே தெரியும் அனைத்திலும்
அசைக்க முடியாத நம்பிக்கை இவள்.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# ஏரை பின்தள்ளிய உலகு



ஏ மானிடனே!
அயல்நாட்டுக்கு
அடிமையாகி
ஏரினை மறந்தாய்

ஏதில்லை
நம் நாட்டில்
எதற்கு அடிமையானாய்
அயல் நாட்டில்

வாய்க்கால் சண்டையா?
வரப்பு சண்டையா?

நமக்கு உணவளிக்கும்
ஏரினை மறந்தாய்!

என்ன இல்லை
நம் நாட்டில்
எதற்கு
அடிமையானாய்
அயல் நாட்டில்!

கவிஞர் முனைவர் சுகந்தி வனிதா,உச்சிப்புளி,இராமநாதபுரம்

# மாலவனும் வைணவமும் (பகுதி 09)

திருமங்கை ஆழ்வாரென மன்னனென நீலனென
பரகாலப் பேரானோ வைணவநெறி பின்பற்றி
மாலவன்மேல் பக்திமிக்கார்! ஆழ்வார்கள் பன்னிருவரில்
மிக்கிளையர்! திருக்குறுங்குடி அண்மைத்தாம் திருக்குரையலூர்
தோன்றியவர்! கள்ளர்குடி! முத்தரையர்குலம்! முத்துராஜப்
பகுப்பினரே! இயற்பெயரோ கலியனென்பர்! யாத்தவையோ:
திருமடலில் சிறியதுவும் பெரியதுவும்; பெரியதிரு
மொழியாக! தாண்டகத்தில் குறிதெனவும் நெடிதெனவும்;
எழுகூற்றிருக் கையதுவும் என்பனவாய் பாசுரங்கள்
ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்து ஒன்றாகும்!
ஜூலையின் பனிரெண்டு பிறந்தநாளாம்! நந்திவர்மன்
காலத்தவரே! சிற்றிலக்கிய வகைகளான திருச்சாழல்
பொங்கத்தம் உற்பவமா லைபொங்கோ வெண்துறையென
பலவகைத்தே! தான்தன்னை பரகால நாயகியாய்
பாவித்தே தலைவியாய் தாயாக தோழியென
பாசமைத்தார்! பக்திதனை பிரிவாற்றா நிலைதன்னை
பாட்டினிலே ஆக்கிட்டார்! மாலவனே முழுமுதலாம்
தெய்வமென்றார்! திவ்யதேசம் நாற்பத்து ஆறதனை
தனித்தவரும், முப்பத்து ஆறதனை கூட்டாக
மங்களாசா சனமதனை செய்திட்டார்! தோற்றத்தை
நளவாண்டு கார்த்திகையின் பௌர்ணமிநாள் கார்த்திகைசேர்
மங்கலநாள் என்றுரைப்பர்! அமங்கலையாம் தேவமாது
கபிலமுனி சாபத்தால் குமுதவல்லி பேரினளாய்
மண்ணகத்துத் தோன்றினளே! வைணவத்தள்! பிராமணப்பெண்!
அன்னவள்மேல் காதலாகி நற்றுணையாய் ஏற்றாரே!
என்றன்னை மணந்திடற்கு தக்கவராய் ஆவதற்கு
நாடோறும் ஆயிரத்து எண்மர்க்கு அன்னமிடல்
வேண்டுமென்றாள்! அஃதாற்றி வற்றியபின் களவாடிய
நிதிகொண்டு தொகரைந்தானே! மாலவனின் வில்லம்சம்!
ஆலிநாடர் வல்லியம்மை சேய்வழியில் ஓங்குவமே!



...தொடரும்

கவிஞர் கணக்காயன் (இ சே இராமன்)

# ஏகாந்த நித்திரையில்

ஏகாந்த நித்திரையில்
என்னவன் உறங்குகிறான்.
நறுவீ மணமதை சாளரம்
மணமுடிக்க.
வீசிடும் தென்றலும்
மௌவலின் மணமும்
காதலில் கலந்தே
சீகரமாய் தெளிக்க.
மண் மணமும்
மகிழச்சியாய் நாசி நுழைய
கனவுலகில் காதலும்
செய்திட்டானோ.
தீராத விக்கலும்
தீர்க்க எடுத்தியம்ப
தாரகையும் துயிலின்றி
வாடியே பசலையில் நோக.
பஞ்சமாய் காதலின்றி
வாரி இரைத்தானோ மாயோன்.
மங்கை மழலையாய்
மடி தவழ தலைக்கோதும்
பூங்காற்றாய் வருடிகிறான்.
நித்திரையில் மூழ்கும்
முழுநிலவின் அழகில்
முப்பொழுதும் தொலைந்திடும்
இரசனையில் ஆழ்ந்திட
பரிதி பறை சாற்றி
வதனம் மிளிரச்செய்ய
மீண்டும் நறுவீ நறுமணத்தில்
மயங்கிய காலையாய்
ஏகாந்த நித்திரையில்
காதலோடு
கரம் கோர்த்த பயணமாம்.



கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# நொடி முள்

நொடிகளை
மட்டும்
காண்பிக்கும்
கடிகாரங்களே
வெற்றியை
துல்லியமாக்குகின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -11

## ரயிலுக்கு நேரமாகி விட்டது



அடுத்த நாள் மும்பைக்குப் புறப்பட வண்டிய அவசரத்தில் எல்லா பொருட்களையும் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள் புவனா. கோகுலம்மாள் மறுநாள் பயணத்திற்கு வேண்டிய சாப்பாட்டிற்கான சமையலை செய்து கொண்டிருந்தாள். புவனாவின் அம்மா ஒரு பை நிறைய முறுக்கு, பணியாரம் எல்லாம் எடுத்துக் கொண்டு பெண்ணையும் பார்க்க வந்தாள்.

சமையற் கட்டிலிருந்து எட்டிப் பார்த்த கோகுலம்மாள் "வா ராணி. பெண்ணை மும்பைக்கு வழியனுப்ப என்னவெல்லாம் எடுத்துக் கொண்டு வந்திருக்கே" என்றாள் அருகில் வந்து பையை விரித்துப் பார்த்து "அம்மா நீ கொஞ்சம் சும்மா இருக்கிறாயா?" சிவா குறுக்கிட்டான்.

"சும்மா இருடா. இது பெரியவங்க சமாச்சாரம். போய் உன் வேலையைப் பார்" என்ற கோகுலம்மாள் பையைப் பார்த்து விட்டு "ம்... கொஞ்சம் முறுக்கும் பணியாரமும் எடுத்துட்டு வந்துட்டா. பெரிசா ஏதாவது செய்வேன்னு நினைச்சேன். என் மகன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

ஒழுங்கா பக்கத்தூர் ஆலமரத்தான் புதூரிலே பிரசிடெண்ட் வீட்டிலே பொண்ணு தாரேன்னாங்க. அங்கே கல்யாணம் பண்ணியிருந்தா சீராக வாரி இறைச்சிருப்பாங்க" முனங்கினார் கோகிலம்மாள்.
"இப்ப புள்ளைங்க பம்பாய்க்கு போறாங்க அவங்களை ஒழுங்காக வழியனுப்ப பாருங்க"
அம்மா ராணிக்கு அப்போது வேறு எதுவும் பேசத்தோன்றவில்லை "ரெண்டாங்கல்யாணத்துக்கு இந்த ஆட்டம் போடுறாங்க.." என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -11** **ரயிலுக்கு நேரமாகி விட்டது**

"எனக்கு ஒரே தலைவலியாக இருக்கிறது. நீயாச்சும் உன் பொண்ணாச்சு. எல்லாம் நீங்களே பண்ணி எடுத்துட்டுப் போங்க" கோபமாகச் சொன்னவள், வராத தலைவலிக்காக போலியாக தலையைப் பிடித்து கொண்டு படுத்துக் கொண்டாள்.

வெளியே வந்த புவனா "அம்மா நீ போய் விட்டு நாளைக்கு நாங்க ஸ்டேஷனுக்கு புறப்படும் போது வா. இரயில்வே ஸ்டேஷனில் பேசிக் கொள்ளலாம். வீணாக எங்க மாமியார் பட படப்பை வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டாம்" என்று ராணியின் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டாள்.

"ஆனாலும் உன்னைப் பிடித்து கிணத்துக்குள்ளே தள்ளி விட்டே னோன்னுதான் தோன்றுகிறது. நான் வர்றேண்டி" என்று அழுது கொண்டே கிளம்பினாள் ராணி.

"மாமி உட்கார்ந்து சாப்பிட்டு விட்டுப் போங்களேன்" என்றான்.அந்தப் பக்கம் வந்த சிவா.

புவனாவைப் பார்த்தபடி கண்களைத் துடைத்துக் கொண்ட ராணி "இல்லை மாப்பிள்ளை. எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நான் வருகிறேன்" என்றவாறு வேகமாகச் சென்றாள் ராணி.

"என்ன புவனா, உங்க அம்மா அழுது கொண்டு போன மாதிரி இருக்கிறதே"

"ஒன்றுமில்லை"

"என் அம்மா ஏன் தான் இப்படி இருக்கிறார்கள் என்று புரியவில்லை."

"ஸ்... ஸ்... அம்மா அங்கே படுத்திருக்கிறார்கள் நீங்கள் எதையாவது சொல்லி திரும்பவும் எதையாவது அவர்கள் குத்திக் காட்டப் போகிறார்கள். ஏற்கனெவே போலியாக தலைவலிண்ணு சொல்லிட்டு சமையலை இடையிலே போட்டு விட்டு போய்ப் படுத்திருக்கிறார்கள். இனி அதையும் நான் தான் செய்யணும்"

"நான் கொஞ்சம் ஹெல்ப் பண்ணட்டுமா?"

"உங்கம்மாவிடம் கூட கொஞ்சம் திட்டு வாங்கிக் கொள்ளவா? சும்மா நல்ல பிள்ளையாட்டம் போய் துணியை மடிச்சு வைங்க"

"பாரு உனக்கு எவ்வளவு கஷ்டம்"

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -11

## ரயிலுக்கு நேரமாகி விட்டது

"பெண்களுக்கு இதெல்லாம் ரொம்பச் சாதாரண விஷயம்"

"என்னவோ போ. புவனா இவ்வளவு அலைச்சலிலேயும் நீ ரொம்பா அழகாக இருக்கிறே" என்று அருகில் வந்தான்.

"அத்தான் அம்மா படுத்திருக்காங்க. இன்னும் நெறைய வேலகள் கிடக்குது. போய் துணிகளை மடித்து வையுங்கள்" என்று அவனைப் பிடித்துத் தள்ளி விட்டு சமையலறைக்குள் வந்தாள் புவனா.

@@@@@@@@@@@@

காலையில் இரயில்வே நிலையத்திற்கு எல்லோரும் புறப்பட, திவ்யா எழுந்திருக்கிறபோது சிவாவின் தம்பி அவளைத் தோளில் தூக்கிக் கொண்டான்.

இரண்டு கார்களில் எல்லாப் பொருட்களையும் சாமான்களையும் பெட்டியையும் பைகளையும் ஏற்றிக்கொள்ள புவனாவின் அம்மா ராணி வேகமாக இரண்டு பைகளைத் தூக்கிக் கொண்டு நடக்க முடியாமல் நடந்து வந்தாள்.

"என்ன மாமி ரயிலுக்கு நேரமாகி விட்டது. கொஞ்சம் சீக்கிரம் வாருங்கள்" என்றான் சிவா.

"கொஞ்சம் பொறுங்கள் மாப்பிள்ளை" என்று சொன்ன ராணி வேகமாக கோவிந்தம்மாளிடம் வந்து "என்ன மதினி இந்த பையெல்லாம் செம்மையா பார்த்துக் கொள்ளுங்கள். லட்டு, கேக், மைசூர்பாகு அப்படீன்னு எல்லா அயிட்டமும் வாங்கிட்டு வந்திருக்கேன்."

"என்னவோ என் பிள்ளையை ஒன்றுமில்லாமல் அனுப்புவதாக நீங்கள் சும்மா குறை சொல்ல வேண்டாம்" என்று பைகளை அவள் முன்னால் வைத்தாள்.

"ம்...சரி. நான் சொன்ன பிறகு தானே கொண்டு வந்தாய். நேற்று சிவா சொன்ன போது நான் மௌனமாக இருந்திருந்தால் நீ இதையெல்லாம் கொண்டு வருவியாக்கும்?"

"மதனி நீங்க ரயிலுக்கு வரலியா?" என்றாள் ராணி

"நீதான் போறியே. நான் எதுக்கு? போய் ஒழுங்கா வழியனுப்பிட்டு வா. புவனாகிட்டே சிவாவை நல்ல முறையில் கவனிக்கச் சொல்லு" என்று வழியனுப்பி வைத்தாள்.

...தொடரும்

இரஜகை நிலவன்

# கொத்தமங்கலம் சுப்பு

கட்டுரை

**பிறப்பு, கல்வி:**



கொத்தமங்கலம் சுப்புவின் இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் தமிழ்நாடு, காரைக்குடி அருகில் ஆவுடையார் கோயிலுக்கு அண்மையிலுள்ள கானேரியேந்தல் என்ற ஊரில் மகாலிங்கம் ஐயருக்கும், கங்கம்மாளுக்கும் அக்டோபர் 10, 1910-ல் பிறந்தார். சிறு வயதிலேயே தாயை இழந்த சுப்பு, சிற்றன்னையின் பராமரிப்பில் வளர்ந்தார். எட்டாம் வகுப்புவரை ஆவுடையார் கோயில் தொடக்கப்பள்ளியில் கல்விகற்றார்.

**தனிவாழ்க்கை:**

கொத்தமங்கலம் சுப்பு இளமையில் தன் முறைப்பெண் மீனாட்சியை மணந்துகொண்டார். கொத்தமங்கலத்திற்கு வந்து அங்கு ஒரு வணிகரிடம் கணக்கு எழுதுபவராக சேர்ந்தார். பள்ளத்தூரில் இருந்த நாடகக்குழு ஒன்றுக்கு பாடல் எழுதினார். அந்நாடகக்குழுவிற்கு நடிக்க வந்த வத்திராயிருப்பைச் சேர்ந்த சீனிவாசன் என்பவர் நடிகராகவும் பாடகராகவும் நாடக ஆசிரியராகவும் இருந்தார். சீனிவாசன் சங்கரதாஸ் சுவாமிகளிடம் நாடகமும் வத்திராயிருப்பு சாமா ஐயங்காரிடம் இசையும் கற்றவர். அவர் கொத்தமங்கலத்துக்கு இடம்பெயர்ந்தார். கொத்தமங்கலம் சீனு என பெயரை மாற்றிக்கொண்டார். அவருடன் இணைந்த சுப்ரமணியன் கொத்தமங்கலம் சுப்பு என பெயரை மாற்றிக்கொண்டார். இருவரும் இணைந்து பவளக்கொடி முதலிய நாடகங்களை நடத்தினர்.

குமர தர்மசீலன்,இதழாசிரியர்

# கொத்தமங்கலம் சுப்பு

கட்டுரை

**தனிவாழ்க்கை:**



கொத்தமங்கலம் சீனு பாடிய இசைத்தட்டு ஒன்று வெளிவந்ததும் அவருக்கு திரைப்பட வாய்ப்பு வரவே அவர் சென்னைக்கு இடம்பெயர்ந்தார். சீனுவின் அழைப்பின்பேரில் சுப்பு சென்னைக்கு வாய்ப்பு தேடி வந்தார். ஜெமினி கதை இலாகாவில் சேர்ந்தார். திரையில் நடிகராகவும் எழுத்தாளராகவும் புகழ்பெற்றபின் சினிமாநடிகை சுந்தரிபாயை இரண்டாவதாக மணந்துகொண்டார்.

கொத்தமங்கலம் சுப்பு ஜெமினி ஸ்டுடியோவின் மேலாளர் பதவிக்கு உயர்ந்தார். ஜெமினி நினைவுகளை எழுதிய அசோகமித்திரன் 'கொத்தமங்கலம் சுப்பு ஜெமினி ஸ்டுடியோவின் முக்கிய அங்கம். அவர்தான் அங்கே நம்பர் டூ. ஒவ்வொரு மாதமும் தன் இல்லத்தில் இசைக்கச்சேரிகள் நடத்துவார். அவர் வீடு ஒரு தர்மசத்திரம் போலவே இருக்கும். எப்போதும் யாராவது ஒரு பத்துபேர் சாப்பிட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர் சம்பாதித்தார், மற்றவர்களுக்காகச் செலவழித்தார்' என்று கூறுகிறார்.

கொத்தமங்கலம் சுப்புவுக்கு பன்னிரண்டு குழந்தைகள். இரு குழந்தைகள் இளமையில் மறைந்தன. அவருடைய மகன் கொத்தமங்கலம் விஸ்வநாதன் தனியார் நிறுவனம் ஒன்றில் உயரதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர், தந்தையின் வில்லிசை நிகழ்வுகளை தொடர்ந்து நடத்திவந்தார்.

குமர தர்மசீலன்,இதழாசிரியர்

# கொத்தமங்கலம் சுப்பு

கட்டுரை

**திரைப்படம்:**



கொத்தமங்கலம் சுப்பு ஜெமினி கதை இலாகா ஊழியராக இருபத்திரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். 1935-ல் வி.எஸ்.கே.பாதம் என்ற குஞ்சிதபாதம் இயக்கிய பட்டினத்தார் திரைப்படத்தில் நடித்தார். திரைப்படத்தின் பாட்டுப் புத்தகத்தில் அவரது பெயர் எஸ்.எம்.எஸ்.மணி என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

1936-ல் சந்திரமோகனா என்ற திரைப்படத்தில் நடிகர் எம்.கே. ராதாவின் நண்பனாக நடித்தார். 1937-ல் மைனர் ராஜாமணி; தொடர்ந்து அனாதைப் பெண், அதிர்ஷ்டம், திருநீலகண்டர், அடங்காப்பிடாரி, கச்ச தேவயானி, மதனகாமராஜன் போன்ற திரைப்படங்களில் நடித்தார். 1939-ல் வெளிவந்த சாந்த சக்குபாய் என்னும் படத்தில் நடித்ததுடன் அதற்கு கதைவசனம் பாடல்களும் எழுதினார். அதுவே அவருடைய ஆற்றல் வெளிப்பட்ட முதல்படம்.

1944-ஆம் ஆண்டில் வெளிவந்த ஜெமினியின் தாசி அபரஞ்சி இவர் நடித்த ஒரு வெற்றிப் படம். 1945-ஆம் ஆண்டில் கண்ணம்மா என் காதலி படத்தை இயக்கினார். இதன் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் அனைத்தையும் கொத்தமங்கலம் சுப்புவே எழுதியிருந்தார். பின்னாளில் இவர் மனைவியான சுந்தரிபாய் இப்படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். 1947-ல் மிஸ் மாலினி திரைப்படத்தை இயக்கி, அதில் தானே கதாநாயகனாக நடித்தார். இத்திரைப்படம் பின்னர் மிஸ்டர் சம்பத் என்ற பெயரில் இந்தியில் வெளிவந்தது. 1953-ஆம் ஆண்டில் ஔவையார் என்ற பிரபலமான திரைப்படத்தை இயக்கினார். கே.பி. சுந்தராம்பாள் போன்ற அன்றைய பிரபலமான நடிகர்கள் இதில் நடித்தனர். இத்திரைப்படத்தில் மனைவி சுந்தரிபாயுடன் சிறு வேடம் ஒன்றில் சுப்பு நடித்தார்.

குமர தர்மசீலன்,இதழாசிரியர்

# கொத்தமங்கலம் சுப்பு

கட்டுரை

வில்லுப்பாட்டுக் கலைஞரும் பாடகருமான கொத்தமங்கலம் சுப்பு அந்த நாட்டார் கலையை நவீனப்படுத்தியவர்களில் ஒருவர். தொடர்ந்து அதற்கான பாடல்களை எழுதினார். அவை நாட்டார்மொழியில் அமைந்தவை. தேசிய இயக்க செய்திகளையும் சமூகசீர்திருத்த அறைகூவலையும் கொண்டவை. காந்திமகான் கதை என்ற பெயரில் வில்லுப்பாட்டாகவே காந்தியின் வாழ்க்கையை எழுதி பலநூறு மேடைகளில் பாடி நிகழ்த்தியிருக்கிறார். 'மருக்கொழுந்து' என்ற கொத்தமங்கலம் சுப்பு கவிதைத் தொகுப்பு இரண்டு தொகுதிகளாய் வந்துள்ளது. முதல் தொகுதியில் பண்டிகை, அறிவுரை, காதல், நாட்டு நடப்பு, நாட்டுப் பற்று என்ற தலைப்புகளில் 200-க்கு மேற்பட்ட பாடல்கள் உள்ளன. இரண்டாம் தொகுதியில் தெய்வீகம், இவர்களைப் பற்றி, இவைகளைப் பற்றி என்ற தலைப்புகளில் 160-க்கு மேற்பட்ட கவிதைகள் உள்ளன.

"மனைவி: சண்முகம் ஆறுபடை வீடு - கந்த
சட்டிக்கு போய்வா காசுபணம் தேடு
கணவன்: சிந்தனை ஏண்டி ரயிலேறு - நம்ம
செலவுக்கு வேண்டியதை சாமி தருவாரு"
என்பது இக்கவிதைகளின் பாணி.



**இசைப்பாடல்கள்:**

தமிழிசை இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட கொத்தமங்கலம் சுப்பு தமிழில் பல இசைப்பாடல்களை எழுதினார். 'மனமே முருகனின் மயில்வாகனம்' போன்ற பாடல்கள் புகழ்பெற்றவை.

**இலக்கிய வாழ்க்கை:**

கொத்தமங்கலம் சுப்பு எழுதிய புகழ்பெற்ற நாவல் தில்லானா மோகனாம்பாள்தான். தொடர்ந்து பந்தநல்லூர் பாமா, பொன்னிவனத்து பூங்குயில் போன்ற தொடர்களை எழுதினார். சினிமாவுக்கான கதையை

குமர தர்மசீலன்,இதழாசிரியர்


# கொத்தமங்கலம் சுப்பு

கட்டுரை

**இலக்கிய வாழ்க்கை:**

கொத்தமங்கலம் சுப்பு எழுதிய புகழ்பெற்ற நாவல் தில்லானா மோகனாம்பாள்தான். தொடர்ந்து பந்தநல்லூர் பாமா, பொன்னிவனத்து பூங்குயில் போன்ற தொடர்களை எழுதினார். சினிமாவுக்கான கதையை ராவ்பகதூர் சிங்காரம் என்ற பெயரில் எழுதினார். 1957-ல் ஆனந்த விகடனில் வெளிவந்த 'தில்லானா மோகனாம்பாள்' மட்டுமே அவருடைய படைப்பாக வாசகர்களால் அறியப்படுகிறது. இக்கதையை அவர் கலைமணி என்ற பெயரில்தான் முதலில் எழுதினார்.

கொத்தமங்கலம் சுப்பு மரபுக் கவிஞர். நாமக்கல் கவிஞர் மரபு என அடையாளப்படுத்தப்படும் பாரதிக்கு பிந்தைய மரபுக்கவிதைப் போக்கைச் சேர்ந்தவர். எளிய நடையில், எளிமையான யாப்புமுறைகளில், நாட்டார்க்கூறுகளுடன் எழுதப்படும் கவிதைகள் இவை. கலைமகள், கல்கி, ஆனந்தவிகடன் இதழ்களில் சுப்புவின் கவிதைகள் வெளியாகியிருக்கின்றன. 'காந்தி மகான் கதை' சுப்பு எழுதிய கவிதைநூல்களில் புகழ்பெற்றது.




**இலக்கிய இடம்:**

கொத்தமங்கலம் இரண்டு பங்களிப்புகளுக்காக ஆராயப்படுகிறார். குறிப்பிட்ட சூழலில் அமைந்த வில்லுப்பாட்டு முதலிய நாட்டார்கலைகள் 1930-கள் முதல் அச்சு ஊடகம், சினிமா வழியாக மேலும் பொதுவான களத்திற்கு சென்றடைந்து கேளிக்கைக்காகவும் பிரச்சாரத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டபோது அவற்றில் உருவான மாறுதல்களை நிகழ்த்திய கலைஞர்களில் கொத்தமங்கலம் சுப்பு முதன்மையானவர். கொத்தமங்கலம் சுப்புவின் தில்லானா மோகனாம்பாள் மரபார்ந்த இசைக்கலைஞர்களின் கோயில்சார்ந்த வாழ்க்கைப்புலத்தை காட்டும் நாவல்.

குமர தர்மசீலன்,இதழாசிரியர்

# கொத்தமங்கலம் சுப்பு

கட்டுரை

**விருதுகள்:**
- கலாசிகாமணி (1967)
- பத்மஸ்ரீ (1971)

**நூல்கள்,நாவல்:**
- தில்லானா மோகனாம்பாள் 1957
- பொன்னி வனத்துப் பூங்குயில்
- மிஸ் மாலினி
- பந்தநல்லூர் பாமா
- ராவ் பஹதூர் சிங்காரம்
- மிஸ் ராதா

**கவிதை:**
- மஞ்சி விரட்டு
- மருக்கொழுந்து
- காந்திமகான் கதை
- பாட்டிலே பாரதி

**நாடகம்:**
- பஞ்சாமிர்தம்
- நாடகமே உலகம்

**திரைப்படங்கள் நடித்தவை:**
- பட்டினத்தார் (1935)
- சந்திரமோகனா (1936)
- அனாதைப் பெண் (1938)
- திருநீலகண்டர் (1939)
- பக்த சேதா (1940)
- அடங்காப்பிடாரி (1939)
- மதனகாமராஜன் (1941)
- மிஸ் மாலினி (1947)
- நவீன சாரங்கதரா (1935)
- மைனர் ராஜாமணி (1937)
- அதிர்ஷ்டம் (1939)
- சாந்த சக்குபாய் (1939)
- சூர்யபுத்ரி (1941)
- கச்ச தேவயானி (1941)
- தாசி அபரஞ்சி (1944)

**இயக்கியவை:**
- கண்ணம்மா என் காதலி (1945)
- மிஸ் மாலினி (1947)
- ஔவையார் (1953)

**மறைவு:**
கொத்தமங்கலம் சுப்பு பிப்ரவரி 15, 1974-ல் மறைந்தார்

குமர தர்மசீலன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
நீ வெற்றி பெற்றால்
சாதனையாளன் பெறாவிட்டால்
பிறருக்கு போட்டியாளனே தவிர
தோல்வியாளன் இல்லை..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com